# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

# அரையாண்டுத் தேர்வு

# 2014 - 2015

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 9

சுட்டெண்:.............................................................. நேரம்: 180 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகள்

அ) 216 ஆ) 18 இ) 247 ஈ) 12

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. தங்கநகைகள் தலைக்கணிந்த பெண்கள் போல் காட்சியளிப்பது

அ) கரும்பு ஆ) புல்
இ) நெல் ஈ) சோளம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. 'ஆடிஆடி' என்பது

அ) இரட்டைக்கிளவி ஆ) அடுக்குத்தொடர்
இ) அடுக்கிடுக்குத்தொடர் ஈ) இணைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. உணவை உற்பத்தி செய்பவர்

அ) இடையர் ஆ) வேடர்
இ) உழவர் ஈ) கடற்றொழிலாளர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. மகாவம்சம் எழுதப்பட்ட மொழி

அ) சிங்களம் ஆ) எலு இ) பாளி ஈ) கன்னடம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. பல்+ பொடி என்பதைச் சேர்த்து எழுதினால்

அ) பல்ப்பொடி ஆ) பற்பொடி இ) பற்ப்பொடி ஈ) பல்பொடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. படுகளம் என்ற சொல்லின் பொருள்

அ) போர்க்களம் ஆ) விளையாட்டுக்களம்
இ) தடகளம் ஈ) நீச்சற்களம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. தனிநாயகம் அடிகளாரின் இயற்பெயர்

அ) வரதன் ஆ) சேவியர்
இ) தேவநேசன் ஈ) மயில்வாகனன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. தரப்பட்ட சொற்களில் பகுசொல்

அ) மரம் ஆ) காடு இ) தமிழர் ஈ) ஊர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற பாடத்தில் பயிர்களை அழித்தது

அ) மழை ஆ) வெய்யில்
இ) கள்வன் ஈ) உழவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. பின்வருவனவற்றில் நிகழ்கால இடைநிலைகள்

அ) ப், வ் ஆ) வ், கிறு இ) த், ட் ஈ) கின்று, கிறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. நடந்தனன் என்ற சொல்லின் பகுதி

அ) நட ஆ) த் இ) அன் ஈ) நடந்த

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. இலங்கையின் முதற்குடிகள்

அ) தமிழர் ஆ) பறங்கியர்
இ) சிங்களவர் ஈ) போர்த்துக்கேயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. கலைவிழா என்பது

அ) கெடுதல் புணர்ச்சி ஆ) தோன்றல் புணர்ச்சி

இ) திரிதல் புணர்ச்சி ஈ) இயல்புப் புணர்ச்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. திருகோணமலையில் தமிழர் வாழ்ந்ததற்கான சான்று

அ) கல்வெட்டுகள் ஆ) ஈமத்தாழிகள்

இ) எலும்புக்கூடுகள் ஈ) நாணயங்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. தமிழருக்கு எதிராகத் திட்டமிட்டு எழுதப்பட்டது மகாவம்சம் எனக் கூறியவர்

அ) ஈ.டபிள்யூ அதிகாரம் ஆ) லயனல் சரத்

இ) சிறிலால் கொடிகார ஈ) சமரசிங்க

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. கற்குகை என்பதைப் பிரித்து எழுதினால்

அ) கல் + குகை ஆ) கல்க் + குகை

இ) கற் + குகை ஈ) கற்க் + குகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. தனிநாயகம் அடிகளார் எழுதிய இறுதி நூல்

அ) தமிழ்மறை விருந்து ஆ) தமிழியல்

இ) குண்டலகேசி ஈ) ஒடிசி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. விற்புருவம் என்ற உவமை அணியில் வரும் உவமேயம்

அ) வில் ஆ) புருவம் இ) அழகு ஈ) போன்ற

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. கடற்கரையில் படம் கீறுவது

அ) நண்டு ஆ) சிறுவன் இ) அலை ஈ) மீன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. வந்தேன் என்பதன் விகுதி

அ) தேன் ஆ) வா இ) வந்து ஈ) ஏன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. தன்னந்தனி என்ற தொடர்

அ) அடுக்குத் தொடர் ஆ) அடுக்கிடுக்குத் தொடர்
இ) இணைமொழி ஈ) இரட்டைக்கிளவி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. நாகதீபம் அமைந்திருப்பது இலங்கையின்

அ) வடபகுதியில் ஆ) தென்பகுதியில்
இ) மேற்குப்பகுதியில் ஈ) கிழக்குப்பகுதியில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. கலிங்கத்துப் போரை நடத்தியவன்

அ) எல்லாளன் ஆ) இராவணன்
இ) அசோகன் ஈ) இராசராசசோழன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. ‘விடிவெள்ளியைக் கொண்டு காலம் அறிந்து கடலோடுபவர்கள்

அ) உழவர் ஆ) மீனவர் இ) வணிகர் ஈ) புலவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. ஊனம் என்ற சொல்லின் பொருள்

அ) செந்நீர் ஆ) விதி

இ) குறைபாடு ஈ) நிறைவு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. மகாவம்சம் எழுதப்பட்ட நூற்றாண்டு

அ) கி.பி 7ஆம் நூற்றாண்டு ஆ) கி.பி 4ஆம் நூற்றாண்டு

இ) கி.பி 5ஆம் நூற்றாண்டு ஈ) கி.பி 6ஆம் நூற்றாண்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. சீன, மலாய மொழிகளில் தனிநாயகம் அடிகளால் மொழிபெயர்க்கப்பட்ட நூல்

அ) நாலடியார் ஆ) கொன்றைவேந்தன்

இ) தமிழ்ப்பண்பாடு ஈ) திருக்குறள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. மரத்தில் இனிய பழங்கள் பழுத்திருந்தன. இச்சொல்லியத்தில் வந்துள்ள அடைமொழி

அ) மரம் ஆ) பழங்கள் இ) இருந்தன ஈ) இனிய

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. சிந்து வெளிச் சிற்பங்களைப் போன்ற சிற்பங்கள் ஈழத்தில் கண்டெடுக்கப்பட்ட இடம்

அ) ஆனைக்கோட்டை ஆ) சேருவில

இ) ஆனைவிழுந்தான் ஈ) ஆனைப்பந்தி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

அறிவியல் இன்று விண்ணை முட்டும் அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளது. பல்துறைகளும் பன்மடங்கு விரிவான வளர்ச்சியைக் கண்டுள்ளன. இத்தகைய அறிவியல் வளர்ச்சி மூலம் நாம் பல நன்மைகளை அடைகின்றோம். மருத்துவத்துறை இன்று பெருமளவு வளர்ச்சியைக் கண்டுள்ளது. ஆனாலும் நம்மில் பலர் அறிவியல் வளர்ச்சியினால் பல பாதிப்புகள் ஏற்படுகின்றன என்று கூறுகின்றனர். இக்கருத்தினை முற்று முழுதாக ஏற்றுக்கொள்ள முடியாது. உண்மையாகப் பார்ப்போமானால் வளர்ந்து வரும் அறிவியலை மாந்தன் தவறாகப் பயன்படுத்துவதனாலேதான் தீமைகள் ஏற்படுகின்றன. இப்போது எங்கு பார்த்தாலும் குழந்தைகளின் கைகளில் ஐ பாட்(I Pad) என்கின்ற அறிவியல் கருவி காணப்படுகின்றது. ஐ பாட்டைக் கொடுத்து விட்டால் குழந்தைகள் குழப்படி செய்யமாட்டார்கள் என்ற எண்ணம் பெற்றோருக்கு இருக்கின்றது. ஆனால் அதனால் வரும் பின் விளைவுகளைப் பெற்றோர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. குழந்தைகளுக்கும் அதனைப் புரிந்து கொள்ளும் வயதில்லை. எதிர்காலத்தில் இக்குழந்தைகள் பார்வைக் குறைபாடுகளால் பாதிக்கப்படலாம். அத்துடன் குழந்தைகளின் சிந்தனை ஆற்றலும் பேச்சாற்றலும் இதனால் தடைப்படுகின்றன. எதற்கெடுத்தாலும் சினக்கும் தன்மையும் அவர்களிடம் வந்து விடுகின்றது. இக்குழந்தைகளின் கைகளில் ஐ பாட்டைக் கொடுத்தது அறிவியலா? கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். வெள்ளம் வருமுன் அணை கட்டவேண்டும் என்ற முதுமொழியை மறந்து விடாதீர்கள்.

1. இன்று பெருமளவு வளர்ச்சி அடைந்துள்ள துறை எது?

2. ஐ பாட் பயன்படுத்துவதனால் குழந்தைகளுக்கு ஏற்படும் தீமைகள் இரண்டினைத் தருக?

3. எக்கருத்தினை முற்று முழுதாக ஏற்கமுடியாது எனக் கூறப்படுகின்றது?

4. குழந்தைகளின் கைகளில் அதிகளவு காணப்படுவது எது?

5. விண்ணை முட்டும் அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளது எது?

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா - ஏழில் ஐந்திற்கு விடை தருக.**

1. தனிநாயகம் அடிகளார் வெளியிட்ட ஆங்கிலச் சிற்றிதழ்கள் எவை?

______________________________________________

______________________________________________

2. மகாவம்சம் தனக்குள் தானே முரண்படும் இரண்டு நிகழ்வுகளைத் தருக?

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

3. ‘‘ஊடுருவியிருக்கிறதே மார்பில் அம்பு வலி உனக்குத் தாங்காதே’’ இக் கூற்று யாருக்கு யாரால் கூறப்பட்டது?

______________________________________________

______________________________________________

______________________________________________

4. கோவேத என்ற எழுத்துப் பொறிக்கப்பட்ட முத்திரை எங்கே யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?

______________________________________________

______________________________________________

5. ‘புதியதொருவீடு’ நாடகத்தை எழுதியவர் யார்?

______________________________________________

______________________________________________

6. பெருங்கற்காலத்தில் எமது முன்னோர் இறந்தோரை எவ்வாறு அடக்கம் செய்தனர்?

______________________________________

______________________________________

7. நாகதீபம் பற்றிய செய்திகள் எந்நூலில் காணப்படுகின்றன?

______________________________________

______________________________________

புள்ளிகள் 10

**4) பொருத்தமான சொற்களை எழுதிக் கவிதையை ஆக்குவோம்.**

## காற்றே !

| | | | | |
|---|---|---|---|---|
| முற்றத்தில் | மலர்களிடம் | வாசலுக்கு | வாழ்ந்தாலும் | காற்றே |

வீசுகின்ற ______________ உன்னிடம் ஒரு கேள்வி - எம்
தேசத்தின் வாசனையை நீ சுமந்து வருவாயா
மாவீரர் கல்லறையின் ______________ ச் செல்வாயா
மாண்பு மிக்க அவர்களுக்கு எம் வணக்கத்தைச் சொல்வாயா
எம் வீட்டு ______________ இனிதாக மலர்ந்திருக்கும்
எண்ணற்ற ______________ நீ ஒன்று உரைப்பாயா
எங்கே நாம் ______________ எப்போதும்
எம் நினைவெல்லாம் எம் தமிழீழத்தில் என்பாயா.

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. அ) இலக்கண வகையால் தமிழ் மொழியில் உள்ள சொற்கள் எத்தனை வகைப்படும்?

______________________________

ஆ) வினைச் சொல், உரிச் சொல் இவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

வினைச் சொல் :- ______________________________

உரிச் சொல் :- ______________________________

2. பின்வரும் இரட்டைக்கிளவிகளின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

கிடு கிடு :- ______________________________

______________________________

மடமட :- ______________________________

______________________________

சொர சொர:- ______________________________

______________________________

3. கொடுத்தான் என்ற வினைச் சொல்லைப் பகுத்து எழுதுக?

______________________________

4. பின்வருவனவற்றிற்கு இவ்விரண்டு எடுத்துக் காட்டுகள் தருக.

சினைப்பெயர் :- ______________ ______________

குணப்பெயர் :- ______________ ______________

இடப்பெயர் :- ______________ ______________

5. அ) மாறுபடு புணர்ச்சிகள் எத்தனை?

______________________________

ஆ) ஏதாவது இராண்டிற்கு எடுத்துக்காட்டுகள் தருக?

______________________________

புள்ளிகள் 15

**6) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

தமிழில் பல சிறந்த நூல்கள் உள்ளன. அவை எமக்குச் சிறந்த வழிகாட்டிகளாக இருக்கின்றன. நாம் அந்நூல்களைத் தேடிக் கற்க வேண்டும். நல்ல நூல்கள் என்றும் நல்ல நண்பர்களைப் போன்றனவாகும். நூலகத்திற்குச் சென்று சிறந்த நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம். நல்ல நூல்கள் எவை என்பதைக் கற்றவர்களிடம் இருந்து தெரிந்து கொள்ள வேண்டும். நல்ல நூல்களைக் கற்போம். நல்லவர்களாக வாழ்வோம்.

புள்ளிகள் 05

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற பாடத்தினைக் கதையாக எழுதி இக்கதையில் இருந்து நீர்புரிந்து கொண்டவை எவை என்பதையும் விளக்குக.

★ மாகவம்சம் பற்றிய உமது கருத்து.

★ தாயகம்

புள்ளிகள் 20